# முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| **கரிமச் சேர்மங்கள்** | ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கார்பன் அணுக்கள் மற்ற தனிமங்களுடன் சகப்பிணைப்பின் மூலம் உருவாவது கரிமச்சேர்மங்கள் ஆகும். |

## கரிமச்சேர்மங்களை வகைப்படுத்துதல்

**கார்பன் சங்கிலி வடிவமைப்பைப் பொறுத்து வகைப்படுத்துதல்**

***1. வளையமற்ற அல்லது திறந்த அமைப்புடைய சேர்மங்கள் :*** கார்பன் அணுக்கள் நேர்க்கோட்டில் (அல்லது) திறந்த அமைப்பில் உள்ளது.

- *நிறைவுற்ற சேர்மம்* – ஒற்றைப் பிணைப்பு. ***எ.கா :*** ஈத்தேன் $CH_3 - CH_3$
- *நிறைவுறா சேர்மம்* – இரட்டை பிணைப்பு (அ) முப்பிணைப்பு பிணைப்பு.

  ***எ.கா :*** ஈத்தீன் $CH_2 = CH_2$, ஈத்தைன் $CH \equiv CH$

***2. வளைய அல்லது மூடிய அமைப்புடைய சேர்மங்கள் :*** கார்பன் அணுக்கள் வளைய (அல்லது) மூடிய அமைப்பில் உள்ளது.

***அ) கார்போ வளையச் சேர்மங்கள்*** - சங்கிலித் தொடரில் கார்பன் அணுக்கள் மட்டும் கொண்டிருத்தல்

i) *அலிசைக்ளிக் சேர்மங்கள் :* கார்போ வளையங்களைப் பெற்றிருக்கும்.

***எ.கா :*** வளைய பியூட்டேன்

ii) *அரோமேட்டிக் சேர்மங்கள் :* பென்சீன் வளையங்களைப் பெற்றிருக்கும். (ஒன்றுவிட்ட இரட்டைப்பிணைப்பு) ***எ.கா :*** பென்சீன்

***ஆ) பல்லின வளையச் சேர்மங்கள்*** - வளையத்தில் கார்பன் உடன் மற்ற சில தனிமங்களை பெற்றிருக்கும். ***எ.கா :*** பிரிடின், பியூரான்

**ஹைட்ரோகார்பன்**

கார்பன் மற்றும் ஹைட்ரஜன் மட்டுமே இணைந்து உருவாகும் சேர்மங்கள் ஆகும்.

**வகைகள் :**

1. *அல்கேன்கள்* - ஒற்றைப் பிணைப்பை மட்டும் பெற்றுள்ள சேர்மங்கள். ***எ.கா :*** $C_nH_{2n+2}$
2. *அல்கீன்கள்* - இரட்டைப் பிணைப்பை பெற்றுள்ள சேர்மங்கள். ***எ.கா :*** $C_nH_{2n}$
3. *அல்கைன்கள்* - மும்மைப் பிணைப்பை பெற்றுள்ள சேர்மங்கள். ***எ.கா :*** $C_nH_{2n-2}$

## கரிமச்சேர்மங்களுக்கு பெயரிடுதல்

கரிமச் சேர்மங்களின் அமைப்பைப் பொறுத்து அதற்கு முறையாகப் பெயரிடும் முறை.

**IUPAC** – International Union of Pure and Applied Chemistry (set of rules)

**IUPAC *பெயரிடுதலின் கூறுகள் :*** **முன்னொட்டு + அடிப்படைச்சொல் + பின்னொட்டு**

| முன்னொட்டு (விதி–2) (பதிலி/கிளை) | | அடிப்படைச்சொல் (விதி–1) (கார்பன் அணுக்களின் எண்ணிக்கை) | | பின்னொட்டு: முதன்மை (விதி–3) (பிணைப்பின் தன்மை) | | பின்னொட்டு: இரண்டாம் நிலை (விதி–4) (வினை செயல் தொகுதி) | |
|---|---|---|---|---|---|---|---|
| **பதிலி** | **பெயர்** | **கார்பன்களின் எண்ணிக்கை** | **பெயர்** | **பிணைப்பு** | **பெயர்** | **செயல் தொகுதி** | **பெயர்** |
| $-F$ | புளோரோ | 1 | மீத் - | ஒற்றை | -யேன் | ஆல்கஹால்(-OH) | ஆல் |
| $-Cl$ | குளோரோ | 2 | ஈத் - | இரட்டை | - ஈன் | ஆல்டிஹைடு (CHO) | ஏல் |
| $-Br$ | புரோமோ | 3 | புரப் - | முப்பிணைப்பு | - ஐன் | கீட்டோன் (-CO-) | ஓன் |
| $-I$ | ஐயோடோ | 4 | பியூட் - | | | கார்பாக்சிலிக் அமிலம் (-COOH) | ஆயிக் அமிலம் |
| $-NH_2$ | அமினோ | 5 | பென்ட் - | | | | |
| $-CH_3$ | மெத்தில் | 6 | ஹெக்ஸ் - | | | | |
| $-CH_2CH_3$ | எத்தில் | 7 | ஆக்ட் - | | | | |
| | | 8 | நான் - | | | | |
| | | 9 | டெக் - | | | | |
| | | 10 | | | | | |

**விதி 5** - முதன்மை பின்னொட்டு மற்றும் இரண்டாம் நிலை பின்னொட்டு சேர்க்கப்பட்டு பிறகு முதன்மை பின்னொட்டில் இருக்கும் **'e'** நீக்கப்பட வேண்டும்.

**விதி 6** – பதிலியின் இடம் கண்டறியப்பட்டு இட எண்ணை தொடர்ந்து கோடு மற்றும் பதிலியை குறிக்கும் முன்னொட்டு குறிப்பிட வேண்டும்.

## வினைச்செயல் தொகுதியின் அடிப்படையில் கரிமச்சேர்மங்களின் வகைப்பாடு

**வினைச்செயல் தொகுதி :** ஒரு சேர்மத்தின் வேதிப் பண்புகளுக்கு காரணமான ஓர் அணு அல்லது அணுக்கள் அடங்கிய தொகுதி.

| கரிமச்சேர்மத்தின் வகைப்பாடு | ஆல்கஹால் | ஆல்டிஹைடு | கீட்டோன் | கார்பாக்சிலிக் அமிலம் | எஸ்டர் (பழச்சாற்றின் மணம்) | ஈதர் |
|---|---|---|---|---|---|---|
| **வினைச்செயல் தொகுதி** | $-OH$ | $O$ <br> $\|\|$ <br> $-C-H$ | $O$ <br> $\|\|$ <br> $-C-$ | $O$ <br> $\|\|$ <br> $-C-OH$ | $O$ <br> $\|\|$ <br> $-C-OR$ | $-O-R$ |
| **பொதுவான வாய்ப்பாடு** | $R-OH$ | $R-CHO$ | $R-CO-R$ | $R-COOH$ | $R-COOR$ | $R-O-R$ |
| **உதாரணம்** | எத்தனால் $CH_3CH_2OH$ | அசிட்டால்டிஹைடு $CH_3CHO$ | அசிட்டோன் $CH_3COCH_3$ | அசிட்டிக் அமிலம் $CH_3COOH$ | மெத்தில் அசிட்டேட் $CH_3COOCH_3$ | டைமெத்தில் ஈத்தர் $CH_3OCH_3$ |
| **பயன்கள்** | கரைப்பான், புரைத்தடுப்பான் | கிருமிநாசினி | கரைப்பான், கறை நீக்கி | சாயங்கள், நிறங்கள் & வண்ணப் பூச்சுகள் | எண்ணெய்கள் மற்றும் லிப்பிடுகளில் உள்ளது | மயக்கமூட்டி, வலி நிவாரணி |

| | எத்தனால் | எத்தனாயிக் அமிலம் |
|---|---|---|
| **வாய்ப்பாடு** | **மூ.வா :** $C_2H_5OH$ **அ.வா :**  | **மூ.வா :** $C_2H_4O_2$ **அ.வா :**  |
| **தயாரித்தல்** | i) கழிவுப்பாகினை நீர்த்தல் <br> ii) அம்மோனியம் உப்புகள் சேர்த்தல் <br> iii) ஈஸ்ட் சேர்த்தல் <br> iv) கழிவு நீரமத்தைக் காய்ச்சி வடித்தல் | எத்தனால் பொட்டாசியம் பெர்மாங்கனேட் முன்னிலையில் ஆக்சிஜனேற்றம் அடையச் செய்து தயாரிக்கப்படுகிறது. <br> $\underset{\text{எத்தனால்}}{CH_3CH_2OH} \xrightarrow[2[O]]{KMnO_4/OH^-} \underset{\text{எத்தனாயிக் அமிலம்}}{CH_3COOH} + H_2O$ |

| | |
|---|---|
| **பல்வேறு வகையான ஆல்கஹால்கள்** | • ***எரிசாராயம் :*** 95.5% எத்தனால் மற்றும் 4.5 % நீர் <br> • ***மெத்தில் ஆல்கஹால் கலந்த சாராயம் :*** 95% எத்தனால் மற்றும் 5% மெத்தனால் <br> • ***தனி ஆல்கஹால் :*** 100 % தூய ஆல்கஹால் <br> • ***இயல்புத் தன்மை இழந்த ஆல்கஹால் :*** எத்தனால் மற்றும் பிரிடின் கலந்த கலவை. <br> • ***ஆற்றல் ஆல்கஹால் :*** பெட்ரோல் மற்றும் எத்தனால் கலந்த கலவை. |
| **சோப்புகள்** | நீளச்சங்கிலி அமைப்பை உடைய கார்பாக்சிலிக் அமிலங்களின் சோடியம் அல்லது பொட்டாசியம் உப்புகள் ஆகும். <br> **கடின சோப்பு :** எண்ணெய் அல்லது கொழுப்பினை எரிசோடாவுடன் சேர்த்து தயாரிக்கப்படுகிறது. ***பயன்கள் :*** *சலவை செய்வதற்கு பயன்படுகிறது.* <br> **மென் சோப்பு :** எண்ணெய் அல்லது கொழுப்பினை பொட்டாசியம் உப்பினை சேர்த்து தயாரிக்கப்படுகிறது. ***பயன்கள் :*** *உடலினை சுத்தம்செய்ய பயன்படுகிறது.* <br> ***தயாரித்தல் :*** *குடுவை முறை :* i) சோப்பாக்கல் வினை ii) உப்பிடுதல் |
| **சோப்பின் தூய்மையாக்கல் வினை** | **மீசெல்ஸ் :** சோப்பு அல்லது டிடர்ஜெண்டை நீரில் கரைக்கும் பொழுது சோப்பு மூலக்கூறுகள் ஒன்றாக இணைந்த கொத்துக்களாக உருவாகிறது. <br> **முனைவுள்ள பகுதி** *(நீர் விரும்பும் பகுதி) :* சிறிய தலை போன்ற கார்பாக்சிலேட் பகுதி - நீருடன் கரைகிறது. <br> **முனைவற்ற பகுதி** *(நீர் வெறுக்கும் பகுதி) :* பெரிய வால் போன்ற கார்பாக்சிலேட் பகுதி – அழுக்கு கொத்துகளுடன் ஒட்டிக்கொள்கிறது. |
| **டிடர்ஜெண்ட்கள்** | சல்போனிக் அமிலத்தின் சோடியம் உப்புகள்(அ) அல்கைல் ஹைட்ரஜன் சல்பேட்டின் உப்புகள். <br> வகைகள் : *1)* **உயிரிய சிதைவு டிடர்ஜெண்ட்கள் :** நேரான ஹைட்ரோ கார்பன் சங்கிலி, இவற்றை நுண்ணுயிரிகளால் எளிதில் சிதைக்க இயலும். <br> *2)* **உயிரிய சிதைவற்ற டிடர்ஜெண்ட்கள் :** மிகுந்த கிளைகளை உடைய ஹைட்ரோ கார்பன் சங்கிலி, இவற்றை நுண்ணுயிரிகளால் எளிதில் சிதைக்க இயலாது. |